Process Safety Beacon
http://www.aiche.org/CCPS/Publications/Beacon/index.aspx
உற்பத்தியாளர்களுக்கான குறிப்புகள்

CCPS CENTER FOR CHEMICAL PROCESS SAFETY
An AIChE Industry Technology Alliance

வழங்குபவர்கள்
CCPS
Supporters

ஜூலை 2008

## ''செயல்முறைகளில் பாதுகாப்பு'' என்பது என்ன?

எல்லா விதமான இடையூறுகளும் ஒரே விதமாக இருப்பதும் இல்லை; ஒரே விதமான தாக்கத்தை ஏற்படுத்துவதும் இல்லை என்பதை நாம் அறிவோம். வேலை செய்யும்போது தவறி விழுதல், வழுக்கி விழுதல், வெட்டுக் காயங்கள், வண்டிகளில் விபத்துகள் போன்ற தனி நபர் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் அல்லது வேலை தொடர்பான விபத்துக்கள் பணியாளர்களை, தனி நபர்களை பாதிக்கக் கூடியவை. ஆனால் செயல்முறைகளிலேயே பாதுகாப்பு சார்ந்த இடையூறுகள் இருந்தால் பல சமயங்களில் மிகவும் ஆபத்தான பொருட்களோ, நெருப்போ, வெடிக்ககூடிய பொருட்களோ அல்லது இவை அனைத்துமோ வெளியே வரலாம். இதனால் பேரழிவுகள் ஏற்படலாம். பலருக்கு பலத்த காயங்கள் ஏற்படலாம்; பல உயிர்களுக்கு ஆபத்து விளையலாம். மேலும் மிகப் பெரிய அளவில் பொருள் மற்றும் சொத்துக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்புகள் ஏற்படலாம். இவ்வாறு செயல்முறை பாதுகாப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் அது தொழிற்சாலையில் உள்ள பணியாளர்களையும், அருகே வசிக்கும் பொதுமக்களையும் மிகப் பெரிய அளவில் பாதிக்கும். எனவேதான் 'செயல்முறை பாதுகாப்பு மேலாண்மைப்பிரிவு'(Process Safety Management), தொழிற்சாலையின் வடிவமைப்பு, அங்குள்ள பொறியியல் வசதிகள், இடர்கள் ஏற்படக்கூடிய வழிகள், நிகழ்வுகளை ஆராய்தல், மாற்றங்களை சமாளிக்கும் விதங்கள், ஆய்வுகள், சோதனைகள், சாதனங்கள் பராமரிப்பு, திறம்வாய்ந்த செயல்முறைக் கட்டுப்பாடுகள், எச்சரிக்கைகள், பல்வேறு செயல்முறைகளை ஒழுங்கு படுத்துதல் மற்றும் அதனை நழுவ விடாது இருத்தல், பணியாளர்கள் பயிற்சி, மனித வளம் சார்ந்த விஷயங்கள் போன்ற அனைத்து விஷயங்களின் மேலும் கூர்ந்த, ஆழமான கவனம் செலுத்துகிறது.





செயல்முறை பாதுகாப்பு



தனிநபர் பாதுகாப்பு

## ஓர் ஒப்புமை

ஆஸ்திரேலியாவின் தேசியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் ஆன்ட்ரூ ஹாப்கின்ஸ் என்பவர், தனி நபர் பாதுகாப்பிற்கும், செயல்முறைகளில் பாதுகாப்பிற்கும் உள்ள வேறுபாட்டை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கியுள்ளார். எல்லா விமான நிறுவனங்களுக்கும் பயணிகளின் சாமான்களை (Baggage) தூக்கி மாற்றும் பணியாளர்களுக்கு காயங்கள் (உதாரணமாக முதுகு, பின்புற தசைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகள்) ஏற்படாமல் பாதுகாப்பது பற்றிய சிந்தனை இருக்கும். இது தனி நபர் பாதுகாப்பிற்கான சிந்தனை. ஆனால் இதைத் தடுப்பதற்கான வழிமுறைகள், விமானப் பயணத்தின் பாதுகாப்பை (செயல்முறை பாதுகாப்பிற்கு இணை) எந்த விதத்திலும் மேம்படுத்தாது. இந்த இரண்டையும் கையாள தனித்தனி முறைகளும், திட்டங்களும் தேவை.

## உங்களுக்குத் தெரியுமா?

- தொழிற்சாலைகளில் தனிநபர் பாதுகாப்பு முறைகள் இருந்தாலும் கூட, செயல்முறை பாதுகாப்பு முறைகள் உறுதி செய்யப்படுவதில்லை. இவை இரண்டிற்கும் கட்டாயமாக பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வும், பாதுகாப்பு சார்ந்த கலாச்சாரமும். தேவை; ஆனால் தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும், மற்றும் வைக்கப்பட்டிருக்கும் இரசாயனப் பொருட்கள், அங்கே நடக்கும் செயல்முறைகள். இவை பற்றி முழுமையாகத் தெரிந்திருந்தால்தான் செயல்முறை பாதுகாப்பு திட்டங்களை சரியாக வடிவமைக்க முடியும்.
- பணியாளர்களுக்கு ஏற்பட்ட காயங்களின் எண்ணிக்கை, சென்ற ஆண்டின் விபத்துக்களின் எண்ணிக்கை, பணியாளர் வேலைக்கு வராத நாட்கள் போன்றவை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பாரம்பரியமாக இருந்து வரும் அளவு கோல்கள். ஆனால் இவை மட்டுமே சரியான அளவு கோல்களாக இருக்குமா என்பது சந்தேகம்தான். அடுத்த மாதத்திற்கான 'பீகான்' இதழில், மிகச் சிறந்த செயல்முறை பாதுகாப்பு வழிகளைப் பற்றிய விரிவான விவரங்கள் கொடுக்கப்படும்.

## நீங்கள் என்ன செய்யலாம்?

- உங்கள் பொறுப்பில் உள்ள, உங்களுக்கு அருகில் உள்ள, தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்களைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு அவற்றை மிக்க கவனமாகக் கையாளவும்.
- உங்கள் பணியிடத்தில் உள்ள தயாரிப்பு முறைகள், பொருட்களை சேகரித்து வைக்கும் இடம், எடுத்துச் செல்லும் முறைகள், ரீபேக்கேஜிங் முறைகள், பிற முறைகள் போன்ற எல்லா செயல்முறைகளைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளவும்.
- செயல்முறை பாதுகாப்பு பற்றிய ஆய்விலும், மாற்றங்களை நிர்வாகிக்கும் விதத்திலும், திடீர் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிவிப்பதிலும், அத்தகைய நிகழ்வுகளை ஆராய்வதிலும், பராமரிப்பு மற்றும் சோதனைகளிலும் உங்கள் பங்கை நன்கு உணர்ந்து, செயல்முறை பாதுகாப்பு வழிமுறைகளை நன்கு பின்பற்றி நடக்கவும்.

**செயல்முறை பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு**

AIChE © 2008. எல்லா உரிமைகளும் பெற்றுள்ளது. வியாபார நோக்கற்றும், பிறருக்கு தெரியப் படுத்துவதற்காகவும் இதை மறுவெளியீடு செய்வது ஊக்குவிக்கப் படுகிறது. ஆனால் CCPS தவிர பிறருக்கு, மறுவிற்பனை (resale)க்காக வெளியிடுவதற்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது. தொடர்பு கொள்ளவும் ccps_beacon@aiche.org or 212-591-7319.

இந்த பீகான், ஆப்பிரிக்கான்ஸ், அரபிய, சீன, டானிஷ், டச், ஆங்கிலம், ஃப்ரெஞ்சு, ஜெர்மன், குஜராத்தி, ஹீப்ரூ, ஹிந்தி, ஹங்கேரிய, இந்தோநேஷிய, இத்தாலிய, ஜப்பானிய, கொரிய, மலாய், மராத்தி, பெர்ஷிய, போலந்து, போர்ச்சுகீசிய, ரஷ்ய, ஸ்பானீஷ், ஸ்வீடிஷ் மற்றும் தாய்லாந்து மொழிகளில் கிடைக்கும்.

Translated by Cholamandalam MS Risk Services, India